"கர்த்தர் நகரைக் காக்காவிட்டால்
அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம்: 1876

சத்தியவேத பாதுகாவலன்

கந்தி: "சுதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம்
தொலைபேசி: 300
REGISTERED AT THE CEYLON G. P 'O. AS A NEWSPAPER.

சத்தியவேத பாதுகாவலன்
வருடசந்தா
இலங்கை: வெளிநாடுகள்:
ரூபா 9-00
(தபாற்செலவு உட்பட)
தனிப்பிரதி சதம் 15

89-ம் புத். | யாழ்ப்பாணம், 1964-ம் ஆண்டு ஆனிமீ 13-ந்திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 23-ம் இல.

# குருமார் - இல்லறத்தோர் இடையில்

## அன்புத்தொடர்பு வேண்டும்

"தேவனுடைய போதனைகள் உலகில் பரவுவதற்குக் குருமார் இல்லறத்தோர் இடையில் சிறந்த அன்புத்தொடர்பு இருக்கவேண்டும். அத்தகைய தொடர்பு நமது நாட்டில் உண்டு." இவ்வாறு இங்கிலாந்தில் வெஸ்ற்மினிஸ்ரர் அதிமேற்றிராசனத்தில் சென்ற ஞாயிறுவாரம் கோவில்களில் வாசிக்கப்பட்ட புதிய அதிமேற்றிராணியாரின் முதல் நிருபத்தில் குறிக்கப்பட்டிருந்தது. அதில் மேலும் கூறப்பட்டிருந்ததாவது: 'குருமாருக்கும் அவர்களது ஞானமந்தைகளுக்குமிடையில் பிளவு ஏற்படுத்திவிடச் சத்துராதிகள் தருணம்பார்த்திருக்கின்றனர். இல்லறத்தோர்படும் கஷ்டங்களைக் குருமார் எவ்வாறு அறியக்கூடுமென்றும் பொதுசனங்களில் குருமார் அனுதாபமற்றவர்கள் என்றும் இவர்கள் கதைகளை எழுப்பித் திருச்சபையில் உட்பகையை உண்டாக்கிக் கூத்துப்பார்க்க ஆசைப்படுகின்றனர். நமது தேசத்தில் இவர்கள் தோல்வி அடைந்திருப்பினும் சில பிறதேசங்களில் இவர்களது முயற்சிகள் விசேஷமாய் தொழிலாளர்களிடையில் சித்திகண்டிருக்கின்றது. நாமும் இங்கு விழிப்பாக இருக்கவேண்டும். இன்றைய நாட்களின் தேவதொண்டின் விசேஷ தன்மை குருமாரும் இல்லறத்தோரும் ஒன்றித்துச்செய்யும் உழைப்பிலேயே தங்கியிருக்கின்றது. இல்லறத்தவரின் குருத்துவத்துக்கு வத்திக்கான்சங்கம் முக்கியத்துவம் அளித்திருப்பது யாவரும் அறிந்த விஷயமே." வெஸ்ற்மினிஸ்ரர் பிரதேசத்திலே அதிமேற்றிராணியார் ஹீனன் அவர்கள் விடுத்த இந்த எச்சரிக்கையானது நமது நாட்டுக்கும் இன்றுமிகப்பொருத்தமானதே. யோசவ்வாஸ் முனிவரைப் பாதுகாத்துப் போஷித்த ஈழத்துக் கத்தோலிக்கரின் வாரிசுகள் தமது குருமாருடன் அன்புத்தொடர்பு கொண்டவர்களாய் என்றும் விளங்குவர் என்பதில் ஐயமில்லையெனினும் விஷமிகளின் செய்கைகளில் விழிப்பு அவசியம்.

## ஒருபிரபல்ய ஆங்கில கத்தோலிக்கர்

இவர்பெயர் கார்மண்ட் பிரபு. 30 வருடகாலமாக உயர்நீதிமன்ற நீதியரசராகக் கடமையாற்றியிருக்கின்றார். வயது 83. உயர் நீதிமன்றத்தில் இவருக்குமுன் 31 வருடம்வேலைசெய்தவரும் ஒருவர் உளர். கார்மண்ட் பிரபு நல்ல சுகமுடையவராய் இருப்பதால் தொடர்ந்து வேலைசெய்யத்தக்கவராய் இருக்கிறார். இவருக்குப் பிரபுப்பட்டம் அருளப்பட்டபொழுது தனதுபெயரை ஊர்ப்பெயர் ஒன்றாகமாற்றாது சொந்தப்பெயரையே தொடர்ந்து வைத்துக்கொண்டார். விவேகம் மிக்கவர். விருந்துகளுக்குப்பின் நடக்கும் பேச்சுரைகளில் மிகச் சாமர்த்தியம் படைத்தவர். 1953-ம்ஆண்டு எடின்பரோ சர்வகலாசாலை இவருக்குச் சட்டப்பகுதியில் "டக்டர்" பட்டம் அளித்தது. ஓய்வுநேரங்களைக் கடலோரங்களில் சிறுபடகுகளில் வேகமாய் ஓடுவதில் செலவுசெய்வார். இவர் எடின்பறோ ஆண்டகையவர்களின் மாளிகைக்கு அருகில் வசித்துவருகின்றார்.

## பன்னிரண்டாம் பத்திநாத பாப்பரசர்

12-ம்பத்திநாதபாப்பரசர் ஜெர்மனிய சர்வாதிகாரி ஹிட்லருடன் பயத்துடன் நடந்துகொண்டார் எனக் குறைகூறுபவரும் உளர். அவர் ஒருபோதும் ஹிட்லருக்குப் பயப்பட்டவர் அல்லர் என்றும், சிலசமயங்களில் அவர் எதிர்ப்புக் குரல் எழுப்பாதுவிட்டது கூடிய ஆபத்துவிழையும் என்று நிச்சயமாய் அறிந்திருந்ததனாலேயே தான் என்றும் எடுத்துக்காட்டிப் பாப்பரசரில் குறைகூறுபவர்கள் விஷயத்தைமுழுதும் அறியாதவர்கள் என விளக்கிவைக்கப்பட்டிருக்கின்றது. வத்திக்கானில் பணம் மிக நெருக்கடியான நிலைமையில் இருந்தபொழுதும், ஹிட்லரின்கீழ் துன்புற்ற யூதர்களுக்கு அக்காலத்தில் போலாந்து மேற்றிராணிமார்மூலம் 12-ம் பத்திநாதபாப்பர் பெரும் பணஉதவிகள் செய்துவந்ததற்கு ஆதாரங்கள்காட்டப்படுகின்றன. மேலும் உரோமாபுரியை ஆகாயக்குண்டுமாரிகளிலிருந்து காத்துக்கொள்வதற்குப் பாப்பரசருக்குப் பெரும் கஷ்டங்கள் இருந்தன. எனினும், அவரது முயற்சிகளின் பயனும் விழைந்த உலக அபிப்பிராயமே உரோமாபுரி குண்டுமாரியினல் தவிடுபொடியாகாது காக்கப்பட்டதற்குக் காரணமாகும்.

## கொழும்பில் மனிதஉரிமை மகாநாடு நடைபெற்றது

சென்ற வியாழக்கிழமை, கொழும்பு றேயல்கல்லூரி மண்டபத்தில் மனித உரிமை மகாநாடு ஆரம்பமாயிற்று. நீதிபதி ரி. எஸ். பெர்ணாந்து அவர்கள் மகாநாட்டை ஆரம்பித்துவைத்தார். நாட்டின் பலபாகங்களிலுமிருந்து பிரதிநிதிகள் குழுமியிருந்தனர். ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்தின் மனித உரிமைப் பகுதித்தலைவர் திரு. ஜோர்ண் ஹம்பிறி அவர்கள் இலங்கை அரசாங்கத்தின் அழைப்புக்கு இணங்கிச் சமுகம் அளித்திருந்தார். இவ்வைபவம் ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின் இலங்கைச் சங்கங்களால் ஒழுங்கு செய்யப்பட்டது. சகலருக்கும் சுதந்திரம். தனிநபர் யாவருக்கும் விடுதலை என்பதே இந்த ஐக்கிய நாடுகளின் தாபனத்தின் குறிக்கோளாகும். பலவகைச் சுதந்திரங்களுக்கும் உரித்தானவர் மனிதர் என இந்த ஸ்தாபனத்தின் சாசனம் கூறுகின்றது. மேலும் இத்தாபனம் சமயசுதந்திரத்தைப் பல இடங்களிலும் வற்புறுத்தி விளக்கிவருகின்றது.

## பாப்பரசர் ஸ்ரீநேருவுக்காக மன்றாடினர்

ஸ்ரீநேருவின் மரணத்தைப்பற்றிக் கேள்விப்பட்ட உடனே பரிசுத்த பாப்பரசர் தமது வேலைகள் யாவற்றையும் நிறுத்திவிட்டு, தமது சிற்றாலயத்துட் சென்று அவருக்காகச் சிலநிமிஷங்கள் செபத்தில் செலவழித்தாரென வத்திக்கான் செய்திகள் கூறுகின்றன. அதன்பின், பாப்பரசர் நேருவின் புதல்வி ஸ்ரீமதி இந்திரா காந்தி அவர்களுக்கும், இந்திய ஜனாதிபதி அவர்களுக்கும், இந்திய கருதினல் கிறுசியஸ் அவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பிவைத்தார். ஸ்ரீ நேரு அவர்கள் 12-வதுபத்திநாத பாப்பரசரைச் சந்தித்ததன்பின் வேறு ஒரு பாப்பரசரையும் நேரில் சந்திக்கும் வசதிபெறவில்லை.

## நோர்வேதேச சமயசுதந்திர பிரகடனம்

நோர்வே தேசத்தவர் 96 சதவீதம் லூர்தரின் சபையைச் சேர்ந்தவர்கள். அங்கு கத்தோலிக்கரின் தொகை 7,300 இவர்கள் நாட்டின் சனத்தொகையில் ·02 சதவீதத்தினர். எனினும் எல்லாச் சமயங்களுக்கும் இந்நாட்டில் சட்டரீதியாகச் சமசுதந்திரம் வழங்கப்பட்டிருக்கின்றது. யேசுசபைக் குருமார் அந்நாட்டில் போதிப்பதைத் தடுத்து 1956-ம் ஆண்டுவரையும் ஒரு சட்டம் விதிக்கப்பட்டிருந்தது. ஆனால், அவ்வருடத்திலேயே அது நீக்கப்பட்டது.

## பிரான்சு தேசத்தில் மேற்றிராணிமாரின் அதிகாரம் கூடுகின்றது

வத்திக்கான்சங்க ஆலோசனைகளின் அடிப்படையில் பிரான்சுதேச திருச்சபை ஆட்சிமுறையில் சிலமாற்றங்கள் ஏற்பட இருக்கின்றன. வத்திக்கான் சங்கத்தில் சென்றவருடம் பிரதேச மேற்றிராணிமாரின்சபைகள் திருச்சபையின் ஆட்சிமுறையில் முன்னிலும் கூடியபங்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஆலோசனைகள் கூறப்பட்டன. இவ்வருடம் பிரான்சுதேச மேற்றிராணிமார் முதன்முதல் கூடிய கூட்டத்திலேயே இந்த ஆலோசனைகளுக்கு இணங்கச் சிலமாற்றங்கள் ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கின்றனர். முந்தியகாலங்களில் பிரான்சுதேச கருதினல்மாரும் அதிமேற்றிராணிமாரும் அடங்கிய ஓர்சபையினரே அத்தேச திருச்சபை அதிகாரிகளாகக் கடமையாற்றினர். வருங்காலத்தில் இத்தேசத்திலுள்ள மேற்றிராணிமார், அதிமேற்றிராணிமார் சகலரும் அடங்கியசபையே அதிகாரம் படைத்த சபையாகும். இச்சபை வருடத்தில் குறைந்தபட்சம் ஒருமுறையாகுதல் கூடும். இச்சபையின் பொறுப்புகளை ஒருநிர்வாகக் குழுநடத்திவரும். அதிகாரசபைக்குத் தலைவராக வருடமுதற்கூட்டத்தில் ஒரு கருதினல் அவர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**ஆனி மாதம் — 1964.**

| | | | |
|---|---|---|---|
| 14 | ஞா. | பெந்தக்கோஸ்துவுக்கு பின்வரும் 4-ம் ஞாயிறு | [ப] |
| 15 | தி. | காலதினம் | [ப] |
| 16 | செ. | காலதினம் | [ப] |
| 17 | பு. | அர்ச். கிற பார்பறிக்கோ | [ரெ] |
| 18 | வி. | அர்ச். எபிரேம் | [வெ] |
| 19 | வெ. | அர்ச் யூலியானம்மாள் | [வெ] |
| 20 | ச. | மரியாயின் சனி | [வெ] |


# சத்தியவேத பாதுகாவலன்

**1964-ம் ஆண்டு ஆனி மாதம் 13-ந் திகதி**


# தேவ தொண்டர்கள் தேவை

கிறீஸ்துநாதர். ஜெனசரேத் வாவியண்டை வந்தா. சீமோனின் படகில் ஏறிக் கொண்டார்.

சிறிது தூரம் படகைத் தள்ளுமாறு கேட்டுக்கொண்டார். பின்னர் கரையில் நின்ற மக்களுக்கு நல்லுரை வழங்கினர்.

போதனை முடிந்தது. சாதனை காட்டும் நேரம் நெருங்கியது.

"ஆழக் கடலிலே படகைச் செலுத்து; அங்கு வலையைவீசு" என தேவகுமாரன் சீமோனுக்குக் கூறினர்.

"இரவு முழுதும் வலையை வீசினேம்; மச்சங்கள் எதுவுமே அகப்படவில்லை" துயரத்தோடு தொடங்கினர் சீமோன்.

"ஆயினும் ஆண்டவரே, தங்கள் பணியைத் தலைமேல் கொண்டேன்" எனமுடித்தார்.

நம்பிக்கையோடு வலையை வீசினர். வலையை இழுக்கத் தொடங்கியபோது!

ஆண்டவரின் புதுமையை அங்கு கண்டார். வலைகிழியு மளவுக்குத் திரளான மச்சங்கள்.

அச்சம் கொண்டார் சீமோன். அவரது துணைவர்களும் அஞ்சி நடுங்கினர்.

"ஆண்டவரே நான்பாவி, என்னை விட்டகன்றுபோம்"எனக் கதறினர் சீமோன்.

"கலங்காதீர்"என ஆறுதலளித்தார் தேவகுமாரன். "இதுவரை மச்சங்களைப் பிடித்தீர்கள்; "இனிமேல் மனிதர்களைப் பிடிக்கிறவர்களாக உங்களை ஆக்குவேன்" என்ருர்.

வள்ளங்களைக் கரையில் இழுத்தனர் சீமோனும் தோழர்களும். பின்னர் மனுமகனைப் பின்தொடர்ந்தனர்.

அடுத்த ஞாயிறுவில் வாசிக்கப்படும் சுவிசேஷகவார்த்தைகள் இவை.

அப்போது நாம் சிந்திக்கவேண்டியவை யாவை?

கிறீஸ்துவின் கட்டளை; இராயப்பர் அதற்கு அடிபணிதல் முதலில் வருகின்றது.

தேவ வார்த்தைகளுக்கு நாம் செவிகொடுத்தல் வேண்டும். அவற்றுக்கிணங்க நாம் செயலாற்றவும் வேண்டும்.

அவரின் கட்டளைகள் நம் விருப்பத்துக்கு எதிரானதாக மனதுக்குக் கசப்பானதாக இருக்கலாம்.

அப்போதுதான் நம் திறமை வெளிப்படுகின்றது. எம்விருப்பை நிறைவேற்ற முற்படுதல் அவசியம்.

ஆயரின் குரலொலி கேட்டனர் சீமோனும் துணைவர்களும் உடனடியாக அவரைப் பின்தொடர்ந்தனர்.

இன்றும் ஆயனுக்கு மனிதர்களைப் பிடிப்பவர்கள் அதாவது இரட்சணிய வேலையை நடத்துபவர்கள் தேவைப்படுகின்றனர்.

அப்பணிக்கு உதவுமாறு குரல்விடுக்கிருர். அக்குரலொலி எங்கும் ஒலிக்கிறது.

இன்றைய ஈழத்திருச்சபைக்கு குருக்கள் பலர் வேண்டும்.

மேல்நாட்டு வேத போதகர்களை நம்பியிருக்க இனியும் இயலாது.

நம் மத்தியிலிருந்து பலர் தேவ தொண்டர்களாக விளங்க முயற்சியெடுத்தல் வேண்டும்.

அக்கருத்துக்காக அடிக்கடி பிரார்த்தித்தல் அவசியம்.

### வண. எஸ். ஜி. இல்லறி சுவாமிகளின்

# தேகவியோகம்

நம்முடைய ஆசனக்கோவில் உதவிக்குரவராய் வந்தநாள்முதல் கடந்தநாற்பது ஆண்டுகளாகத் தியாகம்நிறைந்த தமதுகுருத்துவ வாழ்க்கையாலும், அயராத திருத்தொண்டுகளாலும், கனிவான மொழியாலும், கருணையான பார்வையாலும், அனுதாபசிந்தையாலும், அன்பாதரவாலும் எமது கண்ணையும், கருத்தையும் ஒருங்கே ஈர்ந்து, நமது மனக்கண் முன்பாக ஒருதவமுனிவர்போல் காட்சியளித்திருந்த வண. எஸ். ஜி. இல்லறி சுவாமிகள் சென்ற 7-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பகல்2-30மணிக்குக் காலஞ்சென்ருரெனும் அமங்கலசெய்தியறிந்துமனம்வருந்தலானேம்.

எம்மேற்றிராசனத்திலே நீடாயுள் பெற்று நெடுங்காலங்கண்ட குருப்பிரசாதிகளில் ஒருவராய், எண்பது வயதுகண்டும், கண்பார்வை குன்றியும், தளர்நடைகொண்டும் இறுதி வரை தமதுதெய்வீகசேவையிலே சிறிதும் மனந்தளராதவராய் எம்மிடையே ஓர்உத்தம சாதுவைப் போல் ஊடாடியிருந்த வண. சந்தியாப்பிள்ளை ஞானப்பிரகாசம் இல்லறிசுவாமிகள்வதிரிப்பதியிலே, புராதனப் பெருமைவாய்ந்த குடும்பம் ஒன்றிலே 1884-ம்ஆண்டு கார்த்திகைமாதம் 23-ந்திகதி பிறந்தார். தம்முடைய 13-ம்வயதிலே அர்ச். மர்த்தினர் குருமடத்தில்சேர்ந்து தமிழ், ஆங்கிலம், இலத்தீன் ஆதியாம்மொழிகளைச்சிறப்பாகப் பயின்ருர். அதன்மேல் அர்ச். பேனுட் குருமடஞ்சென்று திருமறைச் சாஸ்திரங்களைத் திறம்படகற்று முடித்து 1914-ம்ஆண்டு தைமாதம் 4-ந்திகதியன்று குருப்பட்டம்பெற்ருர்.

குருத்துவ திருப்பட்டம் பெற்றுக் கொண்டபின் ஐயிரண்டுவருடம் அனுராதபுரம் சஞ்சூசையப்பர் ஆங்கிலகலாசாலை அதிபராய், அங்கு தானே இருவருடம்பங்குக்குரவராய், அதன்மேல் இருவருடம்நமது ஆசனக் கோவில்உதவிக்குரவராய், ஐந்துவருடம் ஊர்காவற்றுறைப் பங்குக்குரவராய், பின்னர் 1931-ம் ஆண்டு முதல் பதினுறுவருடம் ஆசனக் கோவில் பங்குக்குரவராய் விளங்கியிருந்து சுமார்35வருடகாலம் தேவதோத்திர வாஞ்சையுடன் சுவாமிகள்ஆற்றியுள்ள மகத்தான கல்வித் தொண்டு, ஆத்மீகதொண்டு, மற்றும் சமூகதொண்டுகளோ இம்மட்டென்று எடுத்துக்கூறும் தரமன்று,

தவங்கிடந்து அருமையாக, இல்லை, அற்புதமாகக் குருத்துவபதவியை அடைந்துகொண்டபோதே தாம் ஆண்டவருக்காக — அவரின் திருமறைக்காக அருந்திவருந்தி ஆவியுள்ளவரை அயராதுழைக்க வேண்டுமென்பதே சுவாமிகளது குருத்துவ வாழ்க்கையின் குறிக்கோளாகும். அற்புதமாக! ஆம், அவர் குருமடத்திலே திருமறைச் சாஸ்திரங்களைப்படித்துக் குருப்பட்டத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கையில் அவரது கண்ணெளி குன்றியது. பார்வை மங்கியது. அதனுல் அவர் தாம் காத்திருந்தகுருப்பட்டம் கைகடந்து போகுமோவென்று அஞ்சினர்.அங்கலாய்த்தார். இனி வேறுவழியில்லையென்று ஆண்டவரின் திருமுகத்தைச் சரணடைந்தார். தலையணையைத் தமதுகண்ணீரால் நனைத்து இரவுபகலாக அவரின் திருஇரக்கத்தை இரந்து மன்ருடினர். அவர் மன்ருட்டுக் கேட்கப்பட்டது. அற்புதமாக அவரின்பார்வை வெளித்தது. அதனுல் தமக்கு இப்பெருங் கிருபையைப்புரிந்த ஆண்டவரின் திருமுகத்திலே அதிகம்பக்தியுடைய வராய் அன்றுமுதல் தாம்பூசித்து வந்த திருமுகப்படத்தை அந்திய காலம்வரை சென்றவிடமெல்லாம் தமதுஅறையில் பகிரங்கமாக வைத்துப் பக்திசெய்துவரலானர்.

சுவாமிகள்இந்தக் குறிக்கோளைத் தமதுகண்முன்வைத்துத் தாம்திருத்தொண்டாற்றிய விசாரணைப்பங்குகளில் தேவனுக்கும், திருச்சபைக்கும், ஆன்மாக்களின் இரட்சணியத்துக்குமாக அருந்திவருந்திப்பெரும்ஆர்வத்துடன் உழைத்துவந்தமைக்கு அவரதுஞானமக்களே தகுந்த சான்ருவார்கள். அவருக்குள்ள பிறராத்துமஇரட்சணிய வாஞ்சையோ கடலிற்பெரிது! பாவிகள், வழிதவறியவர்கள், பிறசமயிகள் மனந்திரும்ப வேண்டுமென்று அவர் கொண்டிருந்த பேராவலோ மலையிற்பெரிது! இவற்றிற்கெல்லாம் நிலைக்களமாக விளங்கும் செபஅப்போஸ்தலசபை, விசுவாசப் பரப்புதற்சபை ஆகிய விரண்டும் அவரதுஇருகண்களாகும். மரியாயின்சேனையென்ருல் அவருக்கு ஒருஞானப் போர்க்களம். பிள்ளைகளுக்கு ஞானேபதேசம் படிப்பிப்பதென்ருல் அவருக்குஒருதனிஆர்வம். அவர் தமிழ், சிங்களம், ஆங்கிலம் என்னும் மும்மொழிகளிலும் அழகாகப் பிரசங்கம்செய்யும் ஆற்றல்வாய்ந்தவர். பாவசங்கீர்த்தனத் தட்டியைப் பஞ்சணைமெத்தையாகப் பாவித்துவந்தவர். பொதுவிலே கூறுமிடத்து உடல்தளர்ந்தும், உளம்தளராதவராய், மலைதளம்பினும் மனந்தளம்பாதவராய், ஒருபோதுமேகளை கொள்ளாதவராய் அவர் கடைசி வரை உழைத்தார். இளைப்பாறுமுன்னும், இளைப்பாறியபின்னும் இளைப்பாற்றி காணுமலே இறுதிவரை உழைத்தாரென்ருல் மிகையாகுமா? சுவாமிகளின் குருத்துவ வெள்ளி யூபிலிகண்டோம். சென்றதைமாதம் 4-ந்திகதியன்று அவரது குருத்துவ பொன்யூபிலி கண்டோம். கடைசியாக அவர்அமரத்துவம் எய்தியதையும் இப்போது கண்டுகொண்டோம்.

ஆசாரியதிருவஸ்திரங்கள் அணியப்பெற்றிருந்த அவரின்புனிதஉடல் மறுநாட்காலை மேற்றிராசன இல்லத்திலிருந்து ஆசனக்கோவில் கொண்டுசென்று உயர்மேடையில் வைக்கப்படவே அவரது ஆன்ம சாந்திக்காகத் துக்கப்பாடற்பூசை நிறைவேறியது. பின்னர் அன்று பகல்முழுவதும் தூரத்திலும், சமீபத்திலுமிருந்து குரவர்களும், கன்னியர்களும், உறவினரும், அவர் தொண்டாற்றிய விசாரணைப்பங்குகளைச் சேர்ந்த கிறிஸ்தவர்களுமாக அவருக்குத் தங்கள் இறுதிஅஞ்சலியைச் செலுத்துமுகமாக ஆசனக் கோவிலைநோக்கி அலையலையாகச் சரிந்துகொண்டிருந்தமக்கள் அங்கே புன்னகைதவழும் வதனத்துடன் அமைதியாகச் சயனித்திருப்பார் போல் சுவாமிகள் காட்சியளிக்கக் கண்டு, ஆச்சரியவசத்தராய் உளமுருகிநின்ருர்கள். சாயந்தரம்குரவர்களும், கன்னியர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும், அவர்இனசனரும், வதிரிப்பதியே திரண்டுவந்ததுபோல் மற்றும் திரளானமக்களும் ஆலயம்கொள்ளாது தேங்கியிருக்க, மகாவந். மேற்றிராணியாண்டவர்அவர்கள் அந்திமதிருச்சடங்குகளை நிறைவேற்றிவைத்தார். அதன் மேல் சுவாமிகளின் புனிதஉடல் மாபெரும் ஊர்வலமாகச் சேமக்காலை கொண்டுசென்று ஆண்டகை அவர்கள் ஈருந்தஆசிவழங்கிநிற்க, மக்கள்கலங்கிநிற்க, அடக்கம் சிறப்பாக நடந்தேறியது.

R. I. P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

அன்புச் சோதரிகளே! வணக்கம்பல!

நம் இல்லங்களினதும், இதயங்களினதும் அரசரின்மாதம் இஃதல்லவா! இதோ, இருதய ஸ்தாபகத்தினுல் ஏற்பட்ட நன்மையைப்பற்றி ஒருசிறிய கதை.

நல்லநிலையில்வாழ்ந்த குடும்பமொன்று எதிர்பாராதவிதமாக அல்லலுறத் தொடங்கியது. தந்தையார் தீயோரின் சூழ்ச்சியால் வேலையிழந்தார். வீட்டில் கொடியவறுமை தாண்டவமாடத் தொடங்கியது. திடீரென வீட்டார் அனைவரையும் கொடிய விஷசுரம் தாக்கியது. அண்டை அயலோர் விஷசுரம் தம்மையும் பீடித்துக்கொள்ளுமென அஞ்சி அவர்கள்வீட்டை எட்டிப் பார்க்கவுமில்லை. பசி, பட்டினி, பணமின்மை, கொடியநோய் இவற்ருல் மனந் தளர்ந்துபோன அவர்கள் ஒருநாள்இரவு சுமார் 12மணியிருக்கும். நித்திரைகொள்ளவும் முடியாது ஒருவரையொருவர் பார்த்துக் கண்ணீர்வடித்துக் கொண்டிருந்தனர். அழுகையினூடே இல்லத்தலைவி இருதயஸ்தாபகம் செய்யப்பெற்றிருந்த அரசரின் படத்தை நோக்கினுள். மெல்ல நகர்ந்துபோய்ப் பெட்டியுள் தேடிப்பார்த்தாள். ஒரு மெழுகுவர்த்திதான் அவர்களது கடைசிச்சொத்துப்போல் காட்சியளித்தது: அதைக் கொண்டுவந்து படத்தின்முன் ஏற்றிவைத்தாள். அனைவரும் நம்பிக்கையுடன் யேசுவிடம் கைநீட்டி இரந்தனர்.

அவ்வழியாக அவஸ்தையொன்று கொடுக்கும்படி சென்றுகொண்டிருந்த குரவரொருவரின் கண்ணில் இந்த மெழுகுவர்த்தி வெளிச்சம் பட்டது. இந்த அகாலநேரத்தில் விளக்குஏது? என்றெண்ணியவராய் அவ்வீட்டினுள் நுழைந்தார். சொற்பநேரத்துள் நிலைமையைப் புரிந்துகொண்டார். வைத்தியரொருவரைக் கூட்டிவந்தார். தம் அறைவீடுசென்று உணவுப்பொருட்களைக் கொண்டுவந்தார். வேண்டிய உதவிகளெல்லாம் புரிந்தார். தந்தையாருக்கு வேலைதேடிக் கொடுக்கவும் முன்வந்தார். அக்குடும்பத்தவர் அகமகிழ்ந்தனர். இருதய அரசரை வாழ்த்தினர்.

எமது வீட்டிலும் திருஇருதய ஸ்தாபகம்செய்து வைக்கவேண்டுமென்ற எண்ணம் இக்கதையைப் படித்தபின் எம்முள் எழவில்லையா?

சோதரி ரோஜா.

# மயங்க வைத்த கன்னிகைக்கு மணமுடிக்க இதயமில்லை!....

கற்புக்காகவும், விசுவாசத்திற்காகவும் தன்உயிரைப் பலியாக்கிய. அர்ச். அக்னேசம்மாள் இன்றைய கதாநாயகியாகிருள். கி. பி. 304-ம் ஆண்டுவரையில் வேதசாட்சி முடிதரித்த அன்னுளின் பாரம்பரிய வரலாற்றில் பொறுக்கப்பட்ட தொகுதி இது. இன்று திருச்சபை பூசைவேளையிலும் அவள் நாமத்தைச் செபங்களில் புகுத்தியுள்ளது.

### மங்கியதோர் நிலவினிலே ......!

ரோமைநகர காவலர்களின் அதிகாரியான செம்பிரோனியஸ் கிளாகரொன்றின் அதிபதியான பபியனின் மாளிகைக்குத் தனது அரசியல் அலுவல்களின் காரணமாகச் சென்ருன் ஒருமுறை. அப்பொழுது யூலியஸும் தன் தந்தையுடன் அம்மாளிகைக்குச் சென்ருன். யூலியஸ் தனது 23-வது வயதைக் கடந்துகொண்டிருந்த ஒருவாலிபன். யாரோ சிலுவையில் கொல்லப்பட்ட ஒரு யூதனுக்காக, அவன் நாமத்தைச் சொல்லிக்கொண்டே ரோமைநகர அதிகாரிகளால் கொல்லப்பட்டுவருகிற கிறிஸ்தவர்கள் பைத்தியக்காரர்கள் என்பது அவன் மனதிலுள்ள ஓர் எண்ணம். "ரோமானிய விளையாட்டுக்களின் தெய்வமான யூப்பிற்றர், திராட்சைரசமதுபான விருந்தாடித் தெய்வமான பார்ச்சஸ் இவைகட்குத் தூபம்காட்டிவிட்டு இவர்கள்நிம்மதியாகப் போசலாமே" என்று அவன் அலுத்துக்கொண்டது எத்தனையோ தடவையுண்டு.

இன்ரே! தந்தையார் பபியனுடன் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் பொழுதுபோகவில்லை யூலியஸுக்கு. மெல்ல எழுந்து அந்தமாளிகையின் நிலாமுற்றத்துக்கு வந்தான். சிறுவர்கள் ஒருங்குகூடி விளையாடுவதைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தான். திடுமென அவர்கள்ஆடியபந்து மேலெழும்பவே அவர்களுள் மூத்தவளான சிறுமியொருத்தி துள்ளி அதைப் பாய்ந்துபிடித்தாள். அத்தருணம் அவள் தலையில் கட்டியிருந்த பட்டுத்துணி அவிழவே, அவளது பொன்னிறமான கூந்தல் கால்வரை நீண்டது. கார்முகிலின்கண் தண்மதிபோலக் கூந்தலின் நடுவே தோன்றிய அச்சிறுமியின்முகம் அழகு சொட்டியது. அத்தகைய அழகானதோர் காட்சியை யூலியஸ் தன் வாழ்நாளில் கண்டதில்லை. யூலியஸ் பாய்ந்தோடிக் கீழேவந்தான். இதற்கிடையில் சிறுமி அப்பந்தைச் சிறுவனொருவனிடம் வீசிவிட்டு, கூந்தலை விரைவாகமுடிந்துகொண்டிருந்தாள். பந்து திரும்பி அவளைநோக்கி வந்தபோது யூலியஸ் நடுவேவந்து அதை ஏந்திக்கொண்டான்: திரும்பிப் பார்த்தான் சிறுமியை. "அழகான பெண்ணுயிருக்கிருயே! உனக்கு வயதெத்தனை" என்று வினவினுன் ஆழ்ந்த யோசனையுடன்.

எனக்கு வயது 13. இவர்கள் என் தம்பி தங்கைகள்" என்ருள் சிறுமி. "அவர்களைப்பற்றி எனக்கு வேண்டியதில்லை. உன்னைப்பற்றியே கேட்கிறேன். உனது பெயர் என்ன? என்று வினுத்தொடுத்தான் அவள் அழகில்மயங்கிய யூலியஸ். "அக்னெஸ்" என்று கூறிவிட்டுக் கண்களை மூடிக்கொண்டாள். "அழகான பெயர். உனக்கு ஏற்றபெயர்" என்று வைத்தகண் வாங்காமல் அவளை நோக்கினுன் யூலியஸ். அவன் பார்வையைக்கண்டு பயந்தாள் அக்னெஸ். திரும்பிஓடினுள் வீடுநோக்கி.

### தனயனுக்குதவிய தந்தை .... ...!

தம்வீடு சேர்ந்தனர் செம்பிரோனியஸும், மைந்தனும். மாலைவேளை தந்தையை அண்மினுன் தனயன். "அப்பா! என்னைக் காதல்வலையில் சிக்கவைத்துவிட்டாள் ஒரு நங்கை. நான் அந்தமாளிகையில்கண்ட அக்னெசை விவாகம்செய்ய விரும்புகிறேன்" என்ருன் ஆசைமிக்கூர. "அவளா! அவள் ஒரு சிறுமியல்லவா? உனதுவயதில் அரைவாசிகூட அவளுக்கு இருக்காதே" என்ருன் செம்பிரோனியஸ். "அதுவே நல்லதாயிற்று. இவ்வுலகத்தின் இன்பச்சூழல்களைப்பற்றி அவள் அறியமாட்டாள். நானே அவளுக்கு வழிகாட்டுவதில் இன்பமுண்டல்லவா" என்ருன் யூலியஸ். "ஆனுல், அவர்கள் சில பழையகோட்பாடுகளை அனுசரிப்பவர்கள்போலத் தெரிகிறதே. நமது உல்லாசவாழ்க்கைக்கும், அவர்களுக்கும் ஒத்துவராதென்றே என்னுகிறேன்" என்ருர் அனுபவமிக்க தந்தை. "நீங்கள் சொல்லுவதுண்மையாய் இருக்கலாம். ஆனுல், அக்னெசைப்போல ஒரு குணவதி எனக்குக் கிடைத்தால் நானும் எனது தான்தோன்றித் தனத்தைவிட்டு நல்லவனுகி விடமாட்டேனு?" என்ருன் யூலியஸ். அதிசயித்தார் தந்தை தன்மகனு இப்படிப்பேசுகிருன். அப்படியானுல் அக்னெஸ் அவன் மனைவியாவது நல்லதே என்று எண்ணியவர் திருமணப் பேச்செடுக்கச் சம்மதித்தார். பபியன் மாளிகை சென்ருர். யூலியஸோ இன்பக்கனவுகளில் மிதந்தான்.

சினப்பும், சீற்றமுமாகத் திரும்பிய தந்தையைக் கண்டான் யூலியஸ். எத்தனையோ செல்வக் குடும்பக் குமரிகள் யூலியஸைக் கைப்பிடிக்கக் கனவுகண்டுகொண்டிருந்தும் அவன் அவர்களை நாடவில்லை. இப்படிப்பட்ட செல்வாக்குநிறைந்த தன் மகனை அவன் அக்னெஸுக்கு ஏற்றவனல்ல என்று பபியன் கூறினுல் செம்பிரோனியஸுக்குச்சினம்தோற்ருதா என்ன? பழிவாங்குவேன் என்று சினந்துசீறினுன் செம்பிரோனியஸ். ஆனுல், பழிவாங்க முன்வந்தவன் யூலியஸ். மதுபானம் அருந்தி ருந்தி அந்த வெறியினிலேயே ஒரு முடிவும் செய்துவிட்டது அந்தக் கொடும்புலி இந்தப் புள்ளிமானுக்கெதிராக.

### புலியின் வாயில் புள்ளிமான் ........!

ஒருநாள் அக்னெஸ் குடும்பத்தவர் பல்லக்குகளில் வேறொருநகருக்குப் பிரயாணமாகிக் கொண்டிருந்தனர்: அக்னெஸ் தனித்தொரு பல்லக்கில் போய்க்கொண்டிருந்தாள். சனச்செறிவில்லாதஇடமொன்றில் கொடியர்பலர் சூழ்ந்தனர் அப்பல்லக்கை. அக்னெஸைக் கைப்பற்றிக்கொண்டு ஓட்டமெடுத்தனர். பல்லக்குக்காவியவர்கள் எதுவும்செய்ய முடியவில்லை. அக்னெஸோ யூலியஸுக்கு உறவினளான லூக்கிறேசியா என்பவளின் வீட்டில் சேர்க்கப்பட்டாள். புள்ளிமான் வலையில் அகப்பட்ட செய்தி கொடும்புலிக் கெட்டியது. "ஆடம்பரமான விருந்தொன்றுக்குத் தயார் செய்யுங்கள்" என ஏவலாளருக்குக் கட்டளையிட்ட யூலியஸ், லூக்கிறேசியாவை நோக்கி: "எனது அழகான காதலியை இன்றைய நாகரிகமுறையில் அலங்கரிப்பாயாக. அப்போது தான் அச்சிறுமிக்கு இவ்வுலக இன்பங்களில் ஆசைதோன்றும், அவள் என்னை மணம்புரியத் தயாரானதும் நான் பபியனைப் பழிவாங்கியவனுவேன்" என்ருன். யூலியஸும் தன்னை அலங்கரித்துக்கொண்டான். சில நிமிடங்கள் கழிந்தன. லூக்கிறேசியா ஓடிவந்தாள். யூலியஸ்! இதோ பார்! இதை அச்சிறுமி கழுத்தில் அணிந்திருக்கிருளே. இதன்கருத்து உனக்கு விளங்குமல்லவா? ஆகவே, அவளைத் திரும்ப அவள் பெற்ருரிடம் அனுப்பிவிடு" என்ருள் ஒரு மாபிள் சிலுவையைக் காட்டி. திகைத்துப்போனுன் யூலியஸ். "அவள் கிறிஸ்தவளா! பரவாயில்லை! அவளை நான் மணஞ்செய்தாலே போதும்" என்று கூறியவன் விரைவாகச்சென்ருன் அக்னெஸ்இருந்த இடத்தை நோக்கி.

கதவைப் படாரென்று திறந்தான் முழந்தாட்படியிட்டுச் செபத்தில் ஆழ்ந்திருந்த அழகியைக் கண்டான்: திகைத்தெழுந்தாள் அக்னெஸ். ஓர் அசாதாரண உறுதி அவள் முகத்தில் தென்பட்டது. "அப்பாலே போ! என்னைத்தொடாதே"! என்று அவள் உதடுகள் கடிந்தன. கண்களுக்குப் புலப்படாத ஏதோஒன்று அவனைத் தள்ளிவிழுத்தியது. கதவடியில் சாய்ந்த கொடும்புலியைக் கடந்துகொண்டே தெருவில் ஓடியது இளம் புள்ளிமான்.

### புலியின் வாயிலிருந்து சிங்கத்தின் குகையில்........!

லூக்கிறேசியா கண்டாள் இக்காட்சியை. "அவளைப் பிடியுங்கள்! அவள் ஒரு கிறிஸ்தவள்! மாயக்காரி! மந்திர வித்தையினுல் மயக்கி விழுத்திவிட்டாள் நம் யூலியஸை" என்று கத்திக்கொண்டே அவளைத் துரத்தினுள். கெதியில் அங்கிருந்தோர் அனைவரும் அவளைத் துரத்தினர். அகப்படுத்தினர். அதிபதி டெசியஸ்முன் நிறுத்தினர். "கிறிஸ்தவள்" எனக் குற்றஞ் சாட்டினர். "கிறிஸ்தவர்கள் சட்டவிரோதிகள்; ஆனுல், இச்சிறுமி எப்படிச் சட்டவிரோதியாவாள்" எனச் சாதகமாகப் பேசினுன் டெசியஸ். ஆனுல், ஏமாந்துவிடவில்லை அக்னெஸ். "யேசுநாதர் சர்வேசுரனின் குமாரன்" என்று விசுவாச உச்சாரணம் செய்தாள். தம் தேவர்களுக்குத் தூபம்காட்டப் பணித்தான் டெசியஸ். மறுத்தாள்பாவை. "அக்கினியில் எரியட்டும்" என்று தீர்ப்பளித்தான் டெசியஸ். கூட்டமே அதிர்ந்தது ஒருமுறை. இந்தஅழகி தீயில் பொசுங்குவதா? என்றனர் சிலர்.

### கன்னிப்பெண்கள் கூட்டம்! அன்பர் நடுவினிலே ........!

மானபங்கம்செய்து துகிலுரிந்தனர் அக்னெஸை. ஆனுல் அவளின்

(அடுத்த பக்கம் பார்க்க)

## அரியது கேட்கின் அழகுடைமடவீர்...!

அரிது அரிது, அவனியிஃததனிலே
அறிவுடை அணங்காய்ப் பிறத்தலரிது!
அதனிலும் அரிது, இளமைப் போதில்
அன்னை தந்தையர்க்கு அமைந்திடலரிது!
அதனிலும் அரிது, பூம்பெழில் பருவத்தே
அடக்கமுடைமை நிறைந்திடல் அரிது!
அதனிலும் அரிது, அருங்குணம் நிறைந்த
அன்பனைத் துணையாய் அடைந்திடலரிது!
அதனிலும் அரிது. இல்லறந்தனிலே
இன்சொல் இனியளாய் வாழ்தலரிது!
அதனிலும் அரிது, நல்லறங்காத்துச்
சுற்றம் ஓம்பி வாழ்தல் அரிது!
அதனிலும் அரிது, நன்மக்களைப் பெற்றே
நல்வழி நடாத்திச் செல்லல் அரிது!
அதனிலும் அரிது பிறர்நலன் கருதி
உடல், பொருள், ஆவி ஈந்திடல் அரிதே!

## கொடியது கேட்கின் துடியிடைமடவீர்!...

கொடியது கொடியது குவலயந்தனிலே
குறைபாடுடையளாய்ப் பிறத்தல் கொடிது!
அதனிலும் கொடிது, இளமைப் போதில்
அமைந்திடாது தன்வழி நடத்தல் கொடிது!
அதனிலும் கொடிது, பூம்பெழில் பருவத்தே
அடங்காப் பிடாரியாய் வாழ்தல் கொடிது!
அதனிலும் கொடிது, குடி, வறி, சூது
கொண்டான் ஒருவனைக் கொள்ளல் கொடிது!
அதனிலும் கொடிது குடும்பந்தனிலே
கடுஞ்சொல் பேசிக் கடிதல் கொடிது!
அதனிலும் கொடிது, வறியோர்க்கிரங்கா
வந்த சுற்றமும் துறத்தல் கொடிது!
அதனிலும் கொடிது தீநெறிச்சார்புடை
மக்களை உலகிற்கே ஈதல் கொடிது!
அதனிலும் கொடிது, ஒவ்வாக் கானகத்து
உயர்[illegible] வாழ்தல் கொடிதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருளும் உலகிலே

## கத்தோலிக்க ஜனதிபதி

95 சதவிகிதமானோரைக் கத்தோலிக்கர்களாகக்கொண்ட அயர்லாந்து தேச ஜனதிபதி ஈமன் டிவாலரா அண்மையில் அமெரிக்க தலைநகரான வாஷிங்டனுக்குச் சென்றபோது அவருக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. 81 வயதான டிவாலரா கண்பார்வை குறைந்தவர். ஆங்கிலேயருக்கெதிராக ஐரிஷ்காரர்களின் சுதந்திரப் போராட்டத்துக்குத் தலைமைதாங்கிப் பெரும் சிரமங்களையெல்லாம் தாண்டி ஈற்றில் நாட்டுக்கு விடுதலைவாங்கித் தந்த தேசபக்தன். அயர்லாந்து மக்கள் தங்கள் நன்றியின் அறிகுறியாக அவரைத் தம்நாட்டு நிரந்தர அதிபராகத் தெரிந்துள்ளார்கள்.

## கென்னடியின் சார்பில்

அமெரிக்க அதிபர் லிண்டன் யோண்சன், அதிபர் டிவாலராவை மகிழ்ச்சியுடன் வரவேற்றார். "இந்த வரவேற்புக்குத் தலைமைதாங்கவேண்டிய முக்கியபிரமுகர் இங்கில்லை. அந்தப்பிரமுகர் கென்னடி தம்முன்னோர்களின் நாட்டவரான தங்களை வரவேற்க மிகுந்த ஆவல் கொண்டிருந்தார். எனவே, அவரின் சார்பாக நான் உங்களை வரவேற்கின்றேன்" என அதிபர் யோண்சன் குறிப்பிட்டார்.

## துக்க தினம்

அமரர் யோண் கென்னடி உயிரோடிருந்திருந்தால் கடந்த 29-ந் தேதி 47-வது பிறந்ததினத்தைக் கொண்டாடியிருப்பார். அத்தினத்தைக் கடந்த மூன்றுண்டுகள் மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடிய அமெரிக்க மக்கள் இம்முறையும் மறந்துவிடவில்லை. வெனிஸ் மாளிகையில் கடமையாற்றும் 50 உயர்தர அதிகாரிகள் ஓர் அறையில் கூடினர். எங்கள் மத்தியிலிருந்து பிரிக்கப்பட்டிருப்பினும் எங்கள் உள்ளத்திலிருந்து பிரிக்கமுடியாத ஒருநண்பரை நினைவுகூர இங்கு வந்துள்ளோம் என அதிபர் யோண்சன் உணர்ச்சியுடன் பேசி இந்நினைவுப் பிரார்த்தனையை ஆரம்பித்துவைத்தார்.

## நடமாடும் கண்காட்சி

அத்தினத்தில் நியூயோர்க் நகரில் 57-வது தெருவில் உள்ள பிரமாண்டமான கட்டிடமொன்றின் முன்னுல் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கியூவரிசையில் காத்துநின்றனர். கட்டிடத்தினுள்ளே "கென்னடி கண்காட்சி"யொன்று ஆரம்பித்துவைக்கப்பட்டது. ஆரம்பவிழாவுக்காக ஜாக்குலீனும் றொபேட் கென்னடியும் விமானமூலம் வந்திருந்தனர். அமரர் கென்னடியின் வாழ்க்கையின் பல கோணங்களையும் சித்திரிக்கும் படங்கள், பொருட்களுடன் இயங்கும் இக்கண்காட்சியின் வருமானமனைத்தும் கென்னடி ஞாபகார்த்த நூல்நிலைய நிதிகளுடன் சேர்க்கப்படும். இந்நிலையத்தைநிறுவ 5 கோடிரூபா தேவைப்படுகின்றது.

## கண்ணீர் வடித்தனர்

ஏராளமான மக்கள் இறந்த தங்கள் தலைவனை மீண்டும் நினைவுறுத்த அங்கு வந்துசேர்ந்தனர். பலர் உருவப்படங்களைப் பார்த்துக் கண்ணீர் வடித்தனர். இந்தப்படங்களைப்பார்க்கும்போது என் மனதில் கடந்த பத்துவருட நிகழ்ச்சிகள் அலைமோதுகின்றன என ஜாக்குலீன் உணர்ச்சியோடு குறிப்பிட்டாள். ஆனிமாதம் ஆறுந்திகதிவரை நியூயோர்க்கில் கண்காட்சி தொடரும். பின்னர் அமெரிக்காவின் 22 நகரங்கட்கு இக்கண்காட்சி கொண்டுசெல்லப்பட்டு சான்பிரான்சிஸ்கோவில் ஐப்பசி 18-ந் தேதி முடிவடையும்.

## ஆர்லிங்டன் சென்றனர்

அத்தினத்தில் சிறுமி கரோலினும் சிறுவன் யோண்யோணும் (கென்னடி தம்புதல்வனை யோண்யோண் என்றே அழைப்பார்) அன்னையுடன் ஆர்லிங்டன் மயானம் சென்று தங்கள் தந்தையின் சமாதியைத் தரிசித்தனர். சில நிமிடங்கள் முழந்தாளிட்டு ஆன்ம இளைப்பாற்றிக்காகச் செபித்தபின்னர் வெண்மலர்கள் அடங்கியதொரு பூக்கொத்தை வைத்துப் பணிந்தனர். பின்னர் ஜாக்குலீன், கணவனின் இளைய தம்பி பொபிகென்னடியுடன் மீண்டும் விமானமேறிக் கைனிஸ் துறைக்குச் சென்று கணவர்பற்றிய தொலைக்காட்சி ஒன்றில் கலந்துகொண்டாள்.

## ஜெர்மனி உதவுகிறது

மேற்குஜெர்மானிய அரசாங்கத்தின் உதவியுடன் தாய்பேநகரில் ஒருபெரிய மருத்துவமனை நிறுவப்படவிருக்கிறது. சுமார் 47,500,000 ரூபாக்கள் இத்திட்டத்திற்காகச் செலவிடப்படலாம் எனக் கருதப்படுகிறது. சல்வரோரியன் கன்னியர்கள் இம்மருத்துவமனையைப் பரிபாலிப்பார்கள்.

## வரவேற்கின்றனர்

திருச்சிலுவைக் கன்னியர்கள் ஐவர் அண்மையில் கொலம்பியா போய்ச் சேர்ந்தபோது அவர்கட்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. இவர்கள் அரசாங்க காசநோய்த் தவிர்ப்பு மருத்துவ மனையொன்றில் கடமையாற்றுவர்.

## வாழ்வாங்கு வாழ...6

# தோற்றம் வேண்டும் ஏற்றம்பெற

"உடையைவைத்து எடைபோடக்கூடா"தென்றும், "ஆளைக்கண்டு மயங்கக்கூடாதென்றும்"கூறுவர் பெரியர், நம்மவர். தோற்றத்தைவைத்து இவன் இப்படிப்பட்டவன் அவன் அப்படிப்பட்டவன் என்று எடைபோடக்கூடாது தான். ஆனல், இந்த உண்மையொன்றுண்டே. நம்முடைய நல்லதோற்றமும், நம்மின் நல்லவளர்ச்சிக்கு, எதிர்கால முன்னேற்றத்துக்கு, வருங்கால வாழ்வுக்கும் வழிவகுக்கிறதே. ஆகையால் குறைந்தபட்சமாவது நம் தோற்றத்தைப்பற்றிக் கொஞ்சமாவது எண்ணிப்பார்க்கத்தான் வேண்டியுள்ளது. கவனம்செலுத்த வேண்டித்தான் உள்ளது. ஏனெனில்......

நம்முடைய தோற்றம் அதாவது நம்முடைய உடல்நலம், உள்ளத்தூய்மை, புறத்தூய்மை, நடையுடை பாவனை, ஒழுங்குமுறைமை, உடல் நல்லியல்புகள் எலலாம்சேர்ந்த தோற்றம் பற்றி நாம் கட்டாயம் எண்ணிப் பார்க்கத்தானே வேண்டும். இவைகள்வேண்டாமென்று நாம் எள்ளிநகையாட முடியுமா? நம்முடலுக்கு நம் மனதைவிட உயரியஇடம் கொடுக்காவிட்டாலும், சுவர் இருந்தால்தானே சித்திரம் வரையலாம். அதற்காக நம் உடலுக்கு உள்ளவைஎல்லாவற்றையும் கொடுக்கவேண்டும் என்பதில்லை, அதற்குப் பூச்சுப்பூசி, அதற்குப் பூசைசெய்திட வேண்டுமென்பதல்ல. ஆனல், நம்முடைய ஆத்மாவுக்கு ஒரு கூட்டுப்பங்காளி தானே அது. மனநிறைவுடன் நாம் வாழ ஒருவகையில் உதவிசெய்வதும் அதுதானே. ஆகையால் உடலையும், அதனல்எழும் தோற்றத்தையும் நாம் அடியோடு மறந்துவிடக் கூடாதென்பது கணகூடு இல்லையா?

இன்னும் கூறவேண்டுமெனில், அகத்தின் அழகுதான் முகத்தில் தெரியும் என்பர். அதனல், நம்தோற்றம் கனகச்சிதமாக இருக்கிறதென்றல் என்ன அர்த்தம்? நம்உள்ளம் கனகச்சிதமாக இருக்கிறது என்றுதானே அர்த்தம். ஆம், உள்வீடாம் ஆத்மாஎன்னும் அறையிலிருந்துவீசும் பேரொலிதான் முகம், கண்கள், உடல்என்னும் யன்னல்கள் வழியாகப் பிரகாசிக்கின்றது. நல்லுணவும், நற்சுகமும், நல்லுடைகளும், நாம்பாவிக்கும் பலவித அழகு சாதனங்களும் என்ன, தோற்றத்தை ஏற்றமுடையதாக்க உதவுமேயொழியத் தானகத் தோற்றுவிக்காது.

யேசுவின் தோற்றத்தைப் பாருங்கள். எழில்நிறைந்த தோற்றமல்லவா? அழகியமுகம். அன்புநிறைந்தோடும் கண்கள். எழில்கூட்டும் நீண்டமயிர்க்கற்றை. அழகிய வெண்மை. சிவப்புக் கலந்த உடை. ஆஜானுபாகுபோன்ற தோற்றம். ஏன், உரோமாபுரி செனட்டுக்கு யூதேயகவர்னர் பப்ளியஸ் லென்ட்யூலஸ் எனபவர்எழுதிய ஒருகடிதத்தில் யேசுநாதரின் எழில்தோற்றத்தை எவ்வளவு அழகாக வர்ணித்துள்ளார் தெரியுமா? "ஆம், பாவரையும்கவரும் அழகியதோற்றம் அவரின் தோற்றம். ஏன், அவரின் மூக்கும், வாயும் அழகாக அமைந்திருந்தன; திரண்ட தாடியிருந்தது. அது அவரின் முடியின்நிறத்தைக் கொண்டிருந்தது. அவ்வளவு நீளமாக இருக்கவில்லை; அவருடைய பார்வை சாந்தம்நிறைந்ததாகவும், முதிர்ச்சியடைந்ததாகவும் இருந்தது; அவருடைய கண்கள் சாம்பல்நிறமாகவும், தெளிவாகவும், துள்ளியமாகவும் இருந்தன"என்று கூறுகிறர் அவர். ஏன் யேசுநாதர் உடையணிந்திருந்த அழகையும், நடந்த விதத்தையும், பேசிய விதத்தையும்கூட அழகாகவர்ணித்துள்ளார் அவர்.

எது எவ்வாறு இருப்பினும், மற்றவர்களை நம்பக்கம்கவர நம்தோற்றம் ஒரு முக்கிய சாதனம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. சுத்தமான ஆடையணிந்து, சுகமானஉடல்பெற்று வாழவேண்டியது நமது கடமைஎன்பதை நாம் மறக்கக்கூடாது. நம் தோற்றத்தை மற்றவர்கள் போற்றும்வகையில் வைத்துக்கொள்ள முயற்சிப்பது பாவம்என்று எண்ணுதீர்கள். அது தவறல்ல. நாம் முன்னேற வேண்டும் தானே. நாம் முன்னேறினல் தானே நம்இனம் முன்னேறும். நம் இனம் முன்னேறினல்தானே நம்வாழ்வு முன்னேறும். எல்லாவற்றிற்கும் மேலாக நம் மறையின் மதிப்புக் கூடும். நம் மறையை நாலுபேர்வாழ்த்த, அம்மறையைப் பின்பற்றும் நல்லவர்கள் தோற்றமும் ஏதோ ஒருவிதத்தில் அவசியம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகையால், நாம் நம் உடல்மேலும், அதுகாட்டும் தோற்றம் மேலும் அக்கறை காட்டவேண்டியது அவசியமாகிறது. அக்கறைகாட்டி ஏற்றம்பெற்றுப் பலரும்போற்ற வாழ்ந்திடுவோம்.

## ● மாத்தளை:

இம்மாதம் 2-ம், 3-ம், 4-ம் திகதிகளில் மாத்தளைப்பங்கைச் சேர்ந்த அஸ்கிரி, மாத்தளை வாட்டன் என்னும் தோட்டவாசிகளான ஆண் பெண் சிறுவர் முப்பாலாருக்கும் உறுதிப்பூசுதல் என்னும் தேவதிரவிய அனுமானம் அருளப்பட்டது. மகாவந். லீயோ நாணயக்கார மேற்றிராணி ஆண்டவரவர்கள் மேற்கூறியதினங்களில் ஒவ்வொரு தலத்திலும் பிற்பகல் 5 மணியளவில் அப்போஸ்தொலிக்க தரிசனையாகச் சென்று தம்மக்களால் வரவேற்கப்பட்டார்.

கோயில் உள்ளும் புறம்பும் நவீன முறையில் சிங்காரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு தலத்திலும் ஆண்டவரவர்கள் தம்மக்களுக்குப் பாவசங்கீர்த்தனமளித்தபின் 6மணியளவில் திவ்விய பூசை தொடங்கிச் சுவிசேஷம் முடிந்தவுடன் ஆயத்தமாயிருந்த அனைவருக்கும் உறுதிப்பூசுதல் கொடுத்துப் பூசைப்பலியை நிறைவேற்றலானர்.

## ● புளியந்தீவு:

அன்று ஞாயிறுவாரம் 31-5-64 சற்பிரசாதத் திருநாளின் கொண்டாட்டதினம். காலை 7-30மணிக்குப் பாடற்பூசை நடைபெற்றது. மாலை 4-30மணிக்குச்செபமாலை, பிரார்த்தனையின்பின் மகத்தான மாலையாராதனை பாடப்பட்டது. பின் இருகுருமார் துணையோடு மேற்றிராசன பரிபாலகர் வண. ஜெறோம் டிசா சுவாமியவர்கள் சற்பிரசாதநாதரைக் கையிலேந்திய வண்ணம் பக்தர்கள் பவனியாகச்செல்ல அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த வீதிகளின் வழியாக பவனியாக எடுத்துச் செல்லப்பட்டார். இறுதியில் அர்ச். அந்தோனியார் தேவாலய வளவுக்குள் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் "தெதேயும்" என்னும் கீதம் பாடப்பட்டு, சற்பிரசாதஆசீர்வாதம் அருளப்பெற்று மாலைப்பூசையோடு திருநாள் வைபவம் முடிவுற்றது.

—நிருபர்.

## மகளிர் மன்றம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பொன்னனகூந்தல் வளர்ந்து அவள் உடலை மறைத்தது. தீ சுவாலைவிட்டெரிந்தது. தீப்பிழம்புகள் நடுவே திங்கின்றியிருந்தாள் அக்னெஸ். கோபங்கொண்ட சேவகன் ஒருவன் மின்னிடும் வாளினல் வெட்டிச் சாய்த்தான் அப்பூங்கொடியை. கற்பின் லீலிமலருடன், வேதசாட்சியின் செங்குருதியுடன் பரலோகம் பறந்தாள் அக்னெஸ். ஆங்கு அன்பர் யேசு நடுவேவர ஊர்வலம்செல்லும் கன்னிப் பெண்கள்மத்தியிலே பளிச்சிடும் வெண்ணுடையுடன் கலந்துகொண்டாள். அன்னளின் திருநாளை தைமதி 21-ம்நாள் நம்திருச்சபை மகிமையாய்க் கொண்டாடுகிறது.

திரு. M N. பிலிப்பையா
அவர்களின்

## தேகவியோகம்

கிளாலியைப் பிறப்பிடமாய்க் கொண்டவரும் ஆசிரியருள் ஒரு சிறந்த ஆசிரியராய்ப் பணிபுரிந்தவருமாகிய இளைப்பாறிய தலைமை ஆசிரியர் திரு. எம். என். பிலிப்பையா அவர்கள் சென்ற 26-5-64 செவ்வாய்க்கிழமை தன் ஆன்மாவை இறைவன் கையில் ஒப்படைத்தார்.

கல்வித்துறையில் கடும்பணி புரிந்த இவர் கிராமத்தின் ஏனைய முன்னேற்ற விடயங்களையும் மறந்தாரில்லை. இறைவன் கருணையால் பெற்றநாட்டில் பெரும் பகுதி சேவைபுரிந்த இவர் தன் ஓய்வு நேரங்களை நாட்டின் முன்னேற்ற விடயங்களுக்குப் பயன்படுத்தினர். இதன் பயனக ஆங்கே ஒரு கிராம முன்னேற்றச் சங்கத்தை நிறுவி அதை நல்வழிப்படுத்த சங்கத்தின் தலைவராகப் பல வருடங்கள் பணியாற்றியுள்ளார். சங்கத்தின் சார்பாக இவர் ஆற்றிவந்த சேவைகளைப் பாராட்டுமுகமாக 1953-ம்ஆண்டு மாட்சிமைதங்கிய இரண்டாவது எலிசபேத் மகாஇராணியார் அவர்களால் இவருக்கு ஒரு தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது. இதிலிருந்து அவரது சேவை எத்தகையது என்பது தெரியக்கிடக்கிறது. இவர் பரிசுத்த தேவதாயாரிடம் விசேட அன்புவைத்து வந்தார். அதன்காரணமாகக் கிளாலியில் அழிந்த நிலையிலிருந்த பரிசுத்த கண்மணி மாதா கோவிலைத் தமது விடாமுயற்சியால் நன்னிலைப்படுத்தியுள்ளார். அன்னரை இழந்து துயருறும் அவரது மனைவி மக்கள், மருமகள், பேரர், பேத்திகளுடன் நாமும் அனுதாபப்படுகிறேம்.

### நன்றியறிதல்

பரி. சதாசகாயமாதாவுக்கும், அர்ச். சூசையப்பருக்கும் கேட்டவரம் கிடைத்தமைக்காக நன்றிகூறுகிறேன்.

ஓர் அடியாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் பேனு

## 142 ஆலயங்கள்

பரீஸ்நகர அதிமேற்றிராணியார் கர்தினல் பெல்ரின் ஆண்டகை அடுத்த 15 ஆண்டுகளில் தமது மேற்றிராசனத்தில் மேலும் 142 தேவாலயங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளார். என்னுடைய மேற்றிராசனத்தில் எந்த ஒரு விசுவாசியினதும் இல்லத்திலிருந்து அரைமைல் தூரத்துக்குள் ஒருதேவாலயம் இருக்கவேண்டும் என அவர் குறிப்பிட்டார். நாகரிகம் வளர வளர தூரப்பிரயாணம்செய்து ஆலயம்செல்லும் பழக்கம் குறைந்துவிடும். ஆகவே, நாம் அதற்குத்தயாராக இருக்கவேண்டும்என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## இரண்டு சாதனைகள்

வத்திக்கான் சங்கம் இருபெரும் சாதனைகளைச் சாதித்துளது என நியூயோர்க் நகரில் வியன்னு நகர் அதிமேற்றிராணியாரான கர்தினல் கோயினிக் ஆண்டகை குறிப்பிட்டார். ஒற்றுமைஇயக்கத்துக்கு அடிகோலியமை ஒன்று. பொதுவுடமை நாடுகள் தங்கள் கெடுபிடியைத் தளர்த்திச் சங்கத்துக்குத் தங்கள்பகுதி மேற்றிராணிமார்களை வரவிட்டமை மற்றொன்று என இவர் விளக்கம் தந்தார். நியூயோர்க்கில் சுற்றுப்பிரயாணம் செய்துவரும் இந்த ஆஸ்திரிய கர்தினலுக்கு மேற்படி நகரிலுள்ள யேசுசபையாரின் பல்கலைக்கழகம் சட்டசாஸ்திர வல்லுனர் (டாக்டர் ஒவ் லோ) என்ற கௌரவ பதவி வழங்கியுள்ளது.

## அதிகமாகின்றது

நைசீரியாவில் கடந்த மூன்று வருடங்களிலும் கத்தோலிக்கர் தொகை 15 சதவிகிதம் அதிகரித்துள்ளது. தற்போது அங்கு 1,825,000 கத்தோலிக்கர்கள் உளர். நைசீரியாவின் குடிசன மதிப்பு 55,000,000 ஆகும். மூன்று அதிமேற்றிராணியாரும் 14 மேற்றிராணிமாரும் நைசீரிய கத்தோலிக்க திருச்சபையைப் பரிபாலனம் செய்கின்றனர்.

## சிறந்த தினம்

அமரர் கென்னடியின் பிறந்த தினம் கடந்த 29-ந் தேதி (29-5-64) வந்து போயிற்று. அத்தினத்தன்று தமிழ் பேசும் நல்லுலகனைத்தும் போற்றத்தக்க ஒரு கருமத்தை ஆனந்தவிகடன் பத்திரிகை செய்தது. அமரர் கென்னடியின் வரலாற்றை அழகானதொரு தமிழ் நூலாக வெளியிட்டிருக்கிறது. கென்னடியின் கதை என்ற பெயர் கொண்ட இந்நூலின் விலை ஒரு ரூபா தான். எளிய நடையில் அழகிய படங்களுடன் நூல் கவர்ச்சிகரமாகக்காணப்படுகிறது. ஆனந்தவிகடன் பத்திரிகை ஏஜண்டுகளிடம் இந்நூலைப் பெற்றுக் கொள்ளலாம்.

## செங்கொடிகள்

சந்தலூசியா அதிமேற்றிராசன ஆலயத்தின் உயர் கோபுரத்தில் செங்கொடிகள் ஆடி அசைந்தன. என்ன சங்கதியென்று விசாரித்தேன். சற்பிரசாத சுற்றுப்பிரகாரம் என்று கூறினர்கள். ஆலய முன்றிலையும் சுற்றிவரவுள்ள வீதிகளையும் அலங்கரிப்பதில் இளைஞரும் முதியவர்களுமாக ஏராளமானபேர் ஈடுபட்டிருந்தார்கள். சற்பிரசாதநாதரை வரவேற்பதில் காட்டப்படும் இந்த ஆர்வம் இலங்கையின் எப்பகுதிக்குச் சென்றாலும் ஒரேமாதிரியாகவே இருக்கின்றதென எண்ணும்போது மிக்கமகிழ்ச்சியாகவுளது.

## உங்களுக்குத் தெரியுமா ?

ரென்ற்நகரில் நடத்தப்பட்ட பொதுச்சங்கம் மூன்று பாப்புமார் காலத்துக்கு நீடித்ததாம். மூன்றாவது சின்னப்பர், மூன்றாவது யூலியஸ், நான்காவது பத்திநாதர் ஆகிய பாப்புமார் ஒருவர் பின்னொருவராக அப்பொதுச்சங்கத்தை நடத்தினர். இச்சங்கக் கூட்டங்கள் ரென்ற்நகர தேவாலயமொன்றிலே நடைபெற்றமையால் இத்தேவாலயத்தைப் பொதுச்சங்க கோவில் என்று அழைத்தார்களாம்.

## கணவர் சொன்னாராம்

"நான்போக நேரிட்டால் என்னைத் தனியே விட்டுவிடாதே. என்பக்கத்தில் வழியனுப்பும்வரை காத்திரு" என அமரர் கென்னடி தன் அருமை மனைவி ஜாக்குலேனுக்கு ஒருகால் கூறினாராம். கென்னடியின் தந்தை ஜோசப் கென்னடி ஒருமுறை உயிருடன் போராடிக்கொண்டிருந்தபோது அவரின் பக்கத்தில் காத்திருக்கக் கென்னடிக்கு வசதிகிடைக்கவில்லை. எனவே, இதையெண்ணி வருந்திய கென்னடி தமக்கும் அவ்விதம்நேர்ந்தால் துணைவி துணையிருக்க வேண்டுமெனக் கூறினாராம். ஆகவேதான் கணவன் டல்லஸ் நகரில் இறந்ததுதொடக்கம் வாஷிங்டன் நகரில் ஆர்லிங்டன் மயானத்தில் அடக்கம்செய்யும்வரை ஜாக்குலேன் அவருடலைவிட்டுப் பிரியவேயில்லை. இதை அண்மையில் அவளே கூறியுள்ளாள்.

## நகைச் சுவை

சாப்பாட்டுமேசையில் அன்னை சிறுவன் யோணின்மீது கோபம் கொண்டாள்.

"உணவருந்தும்போது நல்லபழக்க வழக்கங்களைக் கையாளவேண்டும். ரொட்டியின் இருபக்கத்திலும் வெண்ணெயைப் பூசுவது நல்லதல்ல" எனக் கடிந்துகொண்டாள்.

சிறுவன்: யோண் அமைதியாகக் கூறினன் :—

"அதனாலென்ன அம்மா! ரொட்டியின் இருபக்கமும் என்னுடைய வாயினுள்தானே போகின்றது."

## ஹொங்கோங் துறைமுகத்தில்

ஹொங்கோங் துறைமுகத்தில் ஒருமாசத்தில் சுமார் 600 புகைக்கப்பல்கள் வந்துபோகின்றன. கப்பல் துறைமுகத்தில் வந்துசேர்ந்த சிலநிமிஷங்களில் ஒருசிறு மோட்டோர்ப்படகு அருகில்வந்து அணையும். அப்படகில் பாப்பரசரது கொடி பறக்கும். பாப்பரசரின் வெள்ளை, மஞ்சள்நிறங்களில் அது துலங்கும். இப்படகில் இருந்து ஒரு குருவானவர் வெளிவந்து கப்பலில் ஏறுவார். அங்குள்ள பிரயாணிகளின் ஆன்ம நன்மையான சேவைகளைச் செய்வதே அவர்வேலை. குருவானவரின் சேவையை விரும்பாதவர்களும் உண்டு. அவர்கள் விரும்பினால் அவர்களுடன் சந்தோஷமாகப் பிறசருமங்களைப்பற்றி உரையாடித் திரும்புவார். இந்தச் சேவையை நிற்பாட்டும் அவசியம் அண்மையில் நேர்ந்திருக்கின்றது காரணம், போதியபணமும் குருமாரும் இல்லாமையே. இந்தச் சேவையிலும் அவசிய கருமங்கள் இருப்பதால் இதைத் தற்காலிகமாக நிற்பாட்டத் தீர்மானித்திருப்பதாக ஹொங்கோங் தீவின் மேற்றிராணியாராகிய பிளான்கி ஆண்டகையவர்கள் மனவருத்தத்துடன் முடிவுசெய்துள்ளார்.

## எந்தையந்தோனி முனியே

சீரிலகு கன்னிமரி யன்னைவின் ணேகிய
    தினத்தன்று லிஸ்பன் தேசச்
சீமான் மடுத்தீன்மின் தேவரா தெரேஸியாள்
    தேசுலவு சோதி மகவாய்
ஜெனித்திகப் பந்தனம் விடுத்துச் சந்யாசியாய்த்
    திகழ்ந்துகுரு மடம்புகுந்த
தீதிலா ஞானச் சம்பூரண னந்ததுய்
    தேசிகா சித்தர் போற்றும்
ஆரிலகு மாதவா அருண்மறைப் போதகா
    அர்ச்சிய சிஷ்ட சிலுவை
அடையாளத்தாற் பேய் வெருண்டோடச் செய்தவா
    அருணனெளி மதலை வடிவாய்
அங்கைவந் தமர்ந்த திரிலோக பரனேடுரை
    யாடிவினை யாடிமகிழ்ந்த
ஐயனே துய்யனே அற்புத வரத்தனே
    அடியருப கரனேயாழி
நீரிலகு மச்சங்களோடி கரைக்கேகிதலை
    நீட்டியே கேட்க ஆங்கு
நின்றவர் வியப்புற பரிசுத்த சுவிசேஷ
    நெறியினை நவின்ற முனிவா
நீடித்த கூன் குருடு செவிடுமை நீக்கிகுண
    நிவாரணம் அளித்த புனிதா
நின்னையே தஞ்சம் என எண்ணிவரும் மைந்தர்யாம்
    நிகழ்த்தும் விண்ணப்பமதுகேள்
ஏரிலகு சத்திய திருச்சபைக் கெதிராய்
    இடுக்கர்செய் வினையகலவும்
சண்டிசையும் வண்டர் வெறிகொண்டுபுரிசண்டையது
    இன்றி சமாதானமுறவும்
எளியவர் புரிகின்ற தொழில்வளம் பெருகவும்
    இடர் பிணி வறுமை இன்றி
இன்பமாய் வாழவும் இரங்கியருள் புரிகுவாய்
    எந்தையந் தோனிமுனியே.

—உடன்குடி, ஜே. எம். விக்டோரியா

# இருளில் ஒளி

## (53)

வண. யோசவ் பக்லி, ஓ. எம். ஐ. எழுதுவது :

1943-ம் ஆண்டு டெக்சாஸ் பகுதியிலுள்ள சான் பெனிட்டோ நகரவிசாரணைப்பங்கின் துணைக்குரவராகப் பணியாற்றியவேளை.

ஒருநாள்காலை இளம்காப்டன் வாரன்என்பவர் என்னைச்சந்திக்க வந்தார். அவர் பிரிமேசன் சபையைச் சேர்ந்தவர். அவர் துணைவி ஓர் உத்தம கத்தோலிக்க நங்கைஎனினும் கணவனிடம் மதம்பற்றி எதுவுமே பேசுவதில்லை: அவள் எங்கள் பங்கைச் சேர்ந்தவள்.

"நான் உங்கள்மதத்தில் இணைய விரும்புகிறேன் சுவாமி" எனத் தெரிவித்தார் காப்டன்: தாம் இவ்விதமுடிவிற்கு வந்ததற்கான காரணத்தையும் தெரிவித்தார்.

காப்டன் வாரன் விமானப்படையைச் சேர்ந்தவர். குண்டுவீசும் விமானமொன்றுக்குத் தலைமைதாங்கிச் செல்லும்படி உத்தரவுபிறந்தது. துணைவியைப் பிரியும்வேளை. கிறிஸ்ரோபர் வரவணிக்கமொன்றைக் கணவனிடம் தந்து அதை அணிந்துகொள்ளுமாறு ஆசையுடன் வேண்டினள் துணைவி.

பிரிய மனைவியை மனம்நோகச் செய்வதை அவர் விரும்பவில்லை. எனவே அணிந்துகொண்டு புறப்பட்டார். நியூகினியாவின்மீது விமானம் பறந்துகொண்டிருந்தவேளை எந்திரக்கோளாறு விமானத்தின் போக்கை மாற்றியது. பயங்கரவனமொன்றின்நடுவே விமானம் விழுந்து நொருங்கியது.

இருவர் காயமுற்றனர். காயமடையவேண்டிய காப்டன் காயமெதுவுமின்றித் தப்பினர். சிலமணித்தியாலங்கள் சென்றன. இரு பிரான்சிஸ்கன்சபைத் துறவிகள் அங்குவந்தனர். அனைவரையும் அழைத்துச்சென்று உபசரித்தனர்.

ஒருமாத காலம்வரை காப்டனும், அவர் குழுவினரும் ஆச்சிரமத்தில் காலம்கழித்தனர். துறவிகள் அவர்களைத் தகுந்தபடி உபசரித்தனர். அவர்களது நடவடிக்கைகளை ஊன்றிக்கவனித்த காப்டனுக்கு அவர்களின் மதத்தில் தனியன்பு பிறந்தது.

தாம் உயிருடன் அமெரிக்கா திரும்பினல் கத்தோலிக்கமதத்தில் இணைவதாகப் பொருத்தனைசெய்து கொண்டார். தம்மை ஆபத்தில் காத்த கிறிஸ்ரோபர் வரவணிக்கத்துக்கும் நன்றிகூறினர்.

ஈற்றில் அந்தஅகதிகட்கு வழிபிறந்தது. அமெரிக்கா திரும்பினர். காப்டன் தம்பொருத்தனையை நிறைவேற்ற என்னிடம்வந்து சேர்ந்தார். உண்மையொளியைப்பெற்று மகிழ்ந்தார்.

சா. பெ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## மாநகரசபை வட்டாரங்கள்

யாழ்ப்பாண மாநகரசபை வட்டாரங்களை அதிகரிக்கச்செய்து எல்லைகளை வகுப்பது சம்பந்தமாகத் தலதாபண மந்திரியால் நியமிக்கப்பட்ட கமிஷனரின் நேர்முகவிசாரணை வருகிற16-ந் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும். கமிஷனராக நியமனம்பெற்றுள்ள முன்னைநாள் மாவட்டநீதிபதி திரு. சி.எக்ஸ். மாட்டீன் அவர்கள் வருகிறஆடிமாதம் 5-ந்திகதிவரை சாட்சியங்களைப் பதிவுசெய்வார்.

## திரு. எச். எல். ஜீ. கொன்ஸ்ரன்ரைன்

யாழ்ப்பாணம், பீ.ஜே. கொன்ஸ்ரன்ரைன் தம்பதிகளின் இரண்டாவது புதல்வராகிய திரு.எச்.எல்.ஜீ. கொன்ஸ்ரன்ரைன் நிகழும் ஆனிமாதத்தோடு அவிசாவலைப்பகுதிக்கு மாவட்ட தந்திப் பரிசோதகராக உத்தியோக உயர்வு பெற்று மாற்றஞ்செய்யப்பட்டுள்ளார்.

## புரட்சிச் சதிவழக்கு

புரட்சிச்சதிவழக்கு விசாரணை நீதிமன்றத்தைப் பொலிசரும், துப்பறியும் பொலிசருமாக நூறுபேரும், பெண் பொலிசர்மூவரும் இப்பொழுது காவல் செய்கின்றனர். கோட்டிற்குவெளியே எதிரிகளைக் கொண்டுசெல்லும்போது இராணுவத்தினர் காவல்பண்ணுகின்றனர். ஆனால், இந்தவழக்கு விசாரணையில் உணவு—விவசாயமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயக்கா சாட்சியம் அளிக்கவிருக்கும் வாரத்திலே பாதுகாப்புகள் அதிகமாகப் பலப்படுத்தப்படவிருக்கின்றன. இதுவரையிருந்த பாதுபாப்பு ஒழுங்குகள்மட்டில் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா திருப்திப்படாமையே இதற்குக் காரணமாகும்.

## கட்டாய ஓய்வு நடவடிக்கை

அரசாங்கம் சட்டநிபுணர்களைக் கலந்து ஆலோசிக்கும்வரை சிங்களத்தில் தேர்ச்சிபெறாத அரசாங்கஊழியர்களுக்குக் கட்டாயஓய்வுஉத்தரவு வழங்குவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதுபற்றி ஆலோசித்துவருவதாகச் செய்திவெளியானபோதிலும் இதுவரை அப்படியான உத்தரவுஎதனையும் அது நிறுத்திவைத்ததாகத் தெரியவில்லை. ஆனால், மேலும் ஓர் அரசாங்க ஊழியருக்குக் கட்டாயஓய்வுக்கான மூன்றுமாத முன்னறிவித்தல் கொடுபட்டிருக்கிறது. இவர் நவரெலிக் கச்சேரியில் ஒருலிகிதராயிருக்கும் திரு. எஸ். எம். ஜே. இம்மனுவேல். இவருடன்இதுவரை 57பேருக்குக் கட்டாயஓய்வுஉத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சிங்களத்தில் தேர்ச்சிபெறத்தவறிய அரசாங்கஊழியர்களைக் கட்டாயமாகச் சேவையிலிருந்து இளைப்பாறச் செய்வதற்கானஉத்தரவு இம்மாதம் 1-ந்திகதியன்று நடைமுறைக்குவரலாயிற்று.

## சிறைக்கைதிகளுக்குச் சலுகை

இலங்கைச் சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளின்உடை மாற்றப்படுமென்றும், அவர்கள்இனிமேல் புகைப்பிடிக்கவும், தாம்பூலம்தரிக்கவும் அனுமதிக்கப்படுவரென்றும் நிதிமந்திரி காரியாலய நிரந்தரக்காரியதரிசி தெரிவித்திருக்கின்றார்.

## பிரபல டக்றர் வெளிநாடு செல்கிறார்

கொழும்பு மாநகரசபையின் சுகாதாரவைத்திய அதிகாரியாக 1940-ம் ஆண்டுமுதல் இதுவரை பிரஸ்தாபத்துடன் கடமையாற்றிவந்துள்ள டக்றர் வி. நடராஜாஅவர்கள் தமதுஉத்தியோகத்திலிருந்து இளைப்பாறிக் கானாநாட்டிலே உயர்தர வைத்தியபதவி ஒன்றை ஏற்குமுகமாகச் சமீபத்திலே அங்கு பிரயாணமாகவிருக்கின்றார். கொழும்புநகரின் சுகாதாரத்திற்காக அளப்பருஞ்சேவை அவர் செய்துள்ளாரென்றும், தமதுகடமைகளை அவர் பொறுப்புணர்ச்சியுடன் செய்துள்ளாரென்றும், கொழும்பு மாநகரசபையின் சரித்திரத்திலே அவர்நாமம் முக்கிய ஸ்தானத்தைப் பெறுமென்றும் பிரமுகர்கள் அவரைப் பாராட்டியிருக்கிறார்கள்.

## பட்டதாரிகளும் ஆசிரிய சேவையும்

"பட்டதாரிகள் ஆசிரியபதவியை இனிமேல் நம்பியிருக்கப்படாது; ஆசிரியசேவையில் இடமில்லையென்பதை அவர்கள் உணரவேண்டும்; மூன்று சர்வகலாசாலைகளிலும் படித்துத் தேறும் பட்டதாரிகள்எல்லோரையும் ஆசிரியசேவையில் அமர்த்தஇயலாது; இவ்வருடஇறுதியில் ஒருபகுதியினரையே ஆசிரியசேவையில் அமர்த்த முடியும்; அதனால்பட்டதாரிகள் வேறு துறைகளில் உத்தியோகம் தேடவேண்டு" மென்று கல்விமந்திரி தெரிவித்திருக்கின்றார்.

## காலி ஜிம்கானா சுவீப்

இனிமேல் சுவீப்நடத்தக் காலி ஜிம்கானாக் கிளப்புக்கு லைசென்ஸ் வழங்கப்படமாட்டாது. சுவீப்நடத்தமுடியாதெனச் சென்ற4-ந்திகதியன்று உள்நாட்டுமந்திரி காரியாலயம் அதற்குத் தெரிவித்துள்ளது. இந்தச்சுவீப் 1904-ம்ஆண்டுமுதல் கடந்தஅறுபது ஆண்டுகளாகநடந்துவரலாயின்று. கடைசியான ஜிம்கானாசுவீப் நிகழும் ஆனிமாதம் 2-ந்திகதிசெவ்வாய்க்கிழமை இழுக்கப்படலாயிற்று.

## ஆசிரிய கலாசாலைப் பிரவேசபரீட்சை

சென்றவைகாசிமாதம் 28-ந்திகதிமுதல் மூன்றுதினங்களாக நடைபெறவிருந்த ஆசிரியகலாசாலைப் பிரவேச பரீட்சை காலவரையறையின்றிப் பின்போடப்பட்டிருக்கிறது. பரீட்சைத் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

## பரிதாபகரமான மரணம்

திரிகோணமலைக் கச்சேரித் தலைமைக்காரியாதிகாரியும், தெல்லிப்பழையைச் சேர்ந்தவருமான 45வயதுடைய திரு. எஸ். சுப்பிரமணியம் அவர்கள் சென்றவார இறுதியிலே இரத்தப்புடையன் பாம்புஒன்றால் கடியுண்டு இருதினங்களின்பின் மரணமானார். இவர் தமதுவயல்களைப் பார்வையிடப் பண்குளம்எனுமிடத்திற்குச் சென்றிருந்தபொழுதே இச்சம்பவம் நிகழலாயிற்று.

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தினாலும், பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார், அர்ச். யூதாததேயு இவர்களின் மன்றாட்டாலும் வைத்தியர்களால் கைவிடப்பட்ட எனது வியாதி நீங்கிச் சுகமடைந்தமைக்காக நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். ம. லீ.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனது மகள் திடீரென ஏற்பட்ட தீவிபத்தினின்று அர்ச். அந்தோனியாரின் புதுமையினால் கூடியகெதியில் பூரணகுணமடைந்தமையால் நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கின்றேன்.

[illegible] அடியான்.

## மத்திய வங்கியின் எச்சரிக்கை

சென்றசிலமாதங்களாக இலங்கையின் பிரதான ஏற்றுமதிப்பொருட்கள் எதிர்பார்த்திருந்தஅளவிலே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகவில்லை. அதனால அவைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்வதை உடனடியாகத் துரிதப்படுத்தவேண்டும். அன்றேல் இந்நாட்டின் வெளிநாட்டுச்செலவாணியின்நிலைமை படுமோசமாகக் கூடுமென மத்தியவங்கி அரசாங்கத்தை எச்சரித்திருக்கிறது.

## பணமில்லாச் சங்கட நிலை

இம்முறை பொலனறுவைப்பகுதியிலே நெல்அதிகமாக விளைந்திருக்கிறது. ஆனால், உத்தரவாதவிலைத்திட்டத்தின்கீழ் அதிகநெல்வாங்குவதற்கோ அன்றேல் நெல்லைச்சேமித்து வைக்கக்கூடியதாகப் புதியபண்டகசாலைகளை அமைப்பதற்கோ நாட்டின் தற்போதைய நிதிநிலைமை இடமளிக்கவில்லையென்று நிதிமந்திரி சென்றசனிக்கிழமை ஏனையமந்திரிகளுக்குத் தெரிவித்திருக்கின்றார்.

## புதிய அரசியற்கட்சி

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியானது மாக்ஸிய சமசமாஜ அரசியற்கட்சியுடன்சேர்ந்து கூட்டரசாங்கம் அமைக்கும்போது இந்தக்கூட்டரசாங்கத்தை எதிர்க்கும் சுதந்திரக்கட்சி அங்கத்தவர்கள் ஒன்றுசேர்ந்து ஸ்ரீலங்கா சுதந்திர சோஷலிஸ்தகட்சியென்ற பெயருடன் ஒருபுதியகட்சியை அமைக்க முடிவுசெய்திருப்பதாகத் தெரியவருகிறது. இப்புதியகட்சியின் தலைவராகத் திரு. சி. பி. டிசில்வாவைத் தெரியவேண்டுமெனப் பலர் ஆலோசனை கூறியிருப்பதாயும், இக்கட்சிக்குக் குறைந்தபட்சம் பதினெட்டுச் சுதந்திரகட்சி எம்.பி. களின் ஆதரவு கிடைக்குமென்ற நம்பிக்கை இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

## இந்திய திராட்சைக்கொடிகள்

கோயமுத்தூரிலே ஒருஏக்கர் திராட்சைத்தோட்டத்தில் முப்பதாயிரமுதல் ஐம்பதாயிரம் இறாத்தல்வரை திராட்சைப்பழங்கள் கிடைத்ததாகச் சமீபத்தில்வெளிவந்தசெய்தியைத்தொடர்ந்து அங்கிருந்து அதிகம்பலன் தரக்கூடிய புதியஇனத் திராட்சைக்கொடிகளை இலங்கை விவசாயத்தலைவர் மூலம் பெற்றுக்கொள்ள யாழ்ப்பாணமாவட்ட விவசாயக்கமிற்றி வேலைசெய்துவருகின்றது.

---

● அமெரிக்க இந்தியானநாட்டிலே ரெறெஹோட்சிநகரில் வண. போல் டெடிசுவாமியார் சமீபத்திலே குருப்பட்டம்பெற்றுத் தமதுமுதற்பூசையை நிறைவேற்றியபோது, அவரதுசகோதரர்களான குருப்பிரசாதிகள்இருவரும் துணைச்செய்ய, அவரின்சகோதரிகளான கன்னியாஸ்திரிகள் ஐவரும் அங்கு சமுகமாயிருந்தனர். இவ்வாறு குடும்பத்தில்பிறந்த எட்டுப்பிள்ளைகளும் குருமாரும், கன்னியாஸ்திரிமாருமாய் இருக்கின்றார்கள்.

விவசாய ரசாயன
மருந்து வகைகளாலும்
கிருமி நாசினி
மருந்துவகைகளாலும்
உங்கள் பயிர்களை அழிக்கும்
பூச்சி புழுக்கள்
மற்றும்
பயிர்களைப் பாதிக்கும்
புற்களையும்
அறவே ஒழித்து
உங்கள் கமத்தொழிலில்

அதிக லாபத்தைப் பெறுங்கள்!
இம் மருந்துகளைத் தெளிக்கக்கூடிய
சிறந்த
தெளிகருவிகள் (SPRAYERS)
எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்
விபரங்கட்கு இன்றே எழுதுங்கள்
ஓட்டோஸ் லிமிட்டெட்,
தந்தி: "AUTOS" யாழ்ப்பாணம். டெலிபோன்: 496.
கிளை
தந்தி: "AUTOS" வவுனியா. டெலிபோன்: 577.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஆனிமாதம் 13-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org